பேரூராட்சியான இடங்கணசாலை பேரூராட்சி—கிட்டத்தட்ட 28,000 வாக்காளர்கள்; சுமார் 50,000 பேர் வாழக்கூடியது அந்தப் பகுதி-- போதுமான நிதி இல்லாமல் மிகவும் கஷ்ட நிலையில் உள்ளது. ஆகையால், அந்தப் பேரூராட்சிகளையெல்லாம் பஞ்சாயத்துகளாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சி ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பும்போது, கட்டாயம் அதை ஊராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 25, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

25—

சட்டக் கல்லூரி

***23947—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெங்களூரிலுள்ள தேசிய சட்டப் பள்ளிக்கு (National Law School) இணையாக கோயம்புத்தூர் சட்டக் கல்லூரியைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.கே. லட்சுமணன்.*

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே அம்பேத்கர் பெயரிலே ஒரு சட்டப் பல்கலைக்கழகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பல்கலைக்கழகம் இருப்பதற்குரிய அறிகுறியே தென்படவில்லை. அங்கே நடைபெறும் நடவடிக்கைகளின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2003 ஜனவரி 29]

மூலமாக அதைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தால், அதற்கு வாய்ப்பு ரொம்பக் குறைவாக இருக்கிறது. இன்றைக்கு உலகமே ஒரு Global Village ஆக மாறி, GATT, அதற்குப் பின்னால் W.T.O., Intellectual Property Rights எல்லாம் வந்துவிட்ட பின்னாலே, வெறும் வாய்தா வாங்கும் வக்கீலாக மட்டும் இல்லாமல், உலகளாவிய பிரச்சினைகளை, சட்ட நுணுக்கங்களைத் தெரிந்த வக்கீல்களை, வழக்கறிஞர்களைத் தயார் செய்ய வேண்டிய நிலைமை நமக்கு இருக்கின்றது. ஆகையினாலே கோவையிலே, நிறையத் தொழிற்சாலைகள் இருக்கிற அந்த இடத்திலே, பெங்களூரிலே உள்ள தேசிய சட்டப் பள்ளியைப் போல ஒரு பள்ளி மிக அவசியமாக இருக்கிறது. காரணம், பன்னாட்டு நிறுவனங்கள் அங்கே தொழிலைத் தொடங்குகின்றபோது, புதிய, புதிய சட்டச் சிக்கல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, அப்பேர்ப்பட்ட நல்ல, தரமான, உலகத் தரத்திற்கு இணையான ஒரு சட்டக் கல்வியை அளிப்பதற்கு கோவையிலே இந்தப் பள்ளி தொடங்கப்படுமா? அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் அறிந்தவர்கள். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தைப்பற்றி ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த அந்தப் பல்கலைக்கழகம் வயதில் சிறிய குழந்தையாக இருந்தாலும், இரண்டு நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே வந்து கலந்துகொண்ட முதல் Convocation-- பட்டமளிப்பு விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்து இருக்கமாட்டார்கள். அதேபோன்று, பெங்களூரிலே இருக்கின்ற தேசிய சட்ட சிறப்புப் பள்ளியைக் காட்டிலும் கூடுதலாகத் திறன் வாய்ந்ததாக சிறப்பு சட்டப் பள்ளி இருக்க வேண்டும் என்கின்ற ஒரு அரிய பெரும் சிந்தனையோடு முதன்முதலாக தமிழ்நாட்டின் வரலாற்றிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயே, National Law School-ஐக் காட்டிலும் ஒரு சிறப்பான பள்ளி இருக்கவேண்டும் என்ற வகையிலே, ஒரு School of Excellence அமைத்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல் upgradation

என்ற வகையில் அம்பேத்கர் சட்டக் கல்லூரியையும்கூடத் திறன் உயர்த்தி உத்தரவிட்டு இன்றைக்கு சிறப்பான முறையில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் அவர்கள் சொல்ல மறந்தது ஏன் என்பதை மாண்புமிகு உறுப்பினரிடம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் உறுப்பினருக்கு, 'தற்போது இல்லை' என்றுதான் சொன்னேனே தவிர, எப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. வருங்காலங்களிலே அதனுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரை 5 ஆண்டு காலத்திலே அதிலிருந்து வெளி வருகின்ற வழக்கறிஞர்கள் நிச்சயமாக நல்ல நிலையிலே வரக்கூடிய அளவிற்கு வாய்ப்புப் பெற்றவர்களாக இருப்பார்கள். அந்த அடிப்படையிலே வருங்காலங்களிலே உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டு விதமான கல்வி முறைகள் இருக்கின்றன. ஒன்று மூன்றாண்டுக் கல்வி முறை; இன்னொன்று, 5 ஆண்டுக் கல்வி முறை. இதற்குப் பதிலாக, இந்த 5 ஆண்டுக் கல்வி முறைதான் இருக்கவேண்டுமென்று சட்டம் இயற்றுவது நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், வேறொன்றும் படிக்க முடியவில்லை என்று சொன்னால், சட்டம் படிப்பது என்ற நிலை இல்லாமல், சட்டம் படிப்பதையே அவர்கள் தொழிலாக எண்ணி, எப்படிப் பொறியியல் படிபபுப் படிக்கின்றார்களோ, எப்படி மருத்துவப் படிப்புப் படிக்கின்றார்களோ, அதைப்போல இதையும் பிளஸ் 2 படித்தவுடனேயே படிப்பதற்காக அரசு இந்த மூன்றாண்டுக் கல்வி முறையை எடுத்துவிட்டு, 5 ஆண்டுக் கல்வி முறையை அமல்படுத்த முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து சிறந்த கருத்தாக இருந்தாலும்கூட, உடனடியாக ஒரே phase-ல் நிச்சயமாக அதைச் செய்ய முடியாது. இப்போது அதனுடைய கருத்தின் அடிப்படையில்தான், சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் 3 ஆண்டு பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு, சட்டப் படிப்பு பயிலுவதற்கு வாய்ப்பு இல்லாததால் இங்கே

2003 ஜனவரி 29]

இருக்கின்றவர்களுக்காக இங்கு இருந்த இடங்களை--மற்றக் கல்லூரிகளுக்கு ஏறக்குறைய 120-க்கும் மேற்பட்ட இடங்களை அதிகப்படுத்தியதோடு சென்னையிலே டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியிலே-- 80 மாணவர்கள்-- ஒரு சிறப்பு சட்டப் பள்ளிக்கு இணையாகப் படிக்கின்ற— 5 ஆண்டு படிக்கின்ற மாணவர்களை படிப்புக்கு நாங்கள் அனுமதித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

26—

மூலிகைப் பண்ணை

***17005—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மூலிகைப் பயிர்கள் வளர்த்தல் மற்றும் மூலிகைப் பண்ணைகள் அமைத்தல் ஆகிய பணிகளை TAMPCOL என்று அழைக்கப்படுகின்ற தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் தமிழ்நாட்டில் வேலூர் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் அரசு சார்பில் விவசாயிகளின் தோட்டங்கள் மூலமாக மூலிகைப் பயிர்கள் உற்பத்தி செய்வது தொடர்பான திட்டம் ஒன்றினை மத்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. மேற்படி திட்டம் மத்திய அரசால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS